

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12-2-2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் நடைபெற்ற அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்லக் குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்று வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பதக்கங்களை அணிவித்து பரிசுக்கோப்பை மற்றும் சான்றிதழைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் பி.கீதாஜீவன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளீதரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.2.2025) சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் நடைபெற்ற அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் இல்ல குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவில் இல்லக்குழந்தைகள் வரைந்த ஓவியங்கள் மற்றும் கதைகள் இடம் பெற்ற "இருட்டில் ஒளிரும் மின்மினிப்பூச்சிகள்" என்ற சிறார் கதை புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் திருமதி. பி.கீதாஜீவன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி. ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கல் குவாரிகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி – நீட்டிப்பு வழங்குவது குறித்து

# கல்குவாரி - கிரஷர் - லாரி உரிமையாளர் சங்கத்துடனான ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, பிப். 14-

நீர்வளத் துறை மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் கல் குவாரிகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்தும் அதன் நீட்டிப்பு வழங்குவது குறித்தும் கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (12.2.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி கோரிக்கைகள் அரசு விதிகளின்படி பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் தலைவர் மு.தீனபந்து, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ.சரவணவேல்ராஜ், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பிறந்த நாள் : 2026 சட்டமன்றத் தேர்தல்:

# கழக இலக்கிய அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

## இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் வேண்டுகோள்!

சென்னை, பிப்.14-

மார்ச் 1 - கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது குறித்தும், வருகிற 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகளை எவ்வாறு ஒருங்கிணைத்து பணியாற்றி கழகத்திற்கு வெற்றிகளைப் பெற்றுத் தருவது குறித்தும் ஆலோசித்திட நடைபெறும் கழக இலக்கிய அணியின் ஆலோசனைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு இலக்கிய அணியின் செயலாளர் வி.பி.கலைராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இலக்கிய அணியின் செயலாளர் வி.பி.கலைராஜன்

இதுகுறித்து வி.பி.கலைராஜன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

வருகிற 20.2.2025 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்பகம் சென்னையில் எனது தலைமையில் கழக இலக்கிய அணி சார்பாக முதல்வர் அவர்களின் பிறந்தநாள் சம்பந்தமாகவும், வரவிருக்கும் 2026 சட்டமன்ற தேர்தல் சம்பந்தமாகவும் நம்முடைய இலக்கிய அணியின் பணி என்ன என்பதை பற்றி கலந்து ஆலோசிக்க முடிவெடுக்கப்படவுள்ளது.

அதில் மாநில இலக்கிய அணி நிர்வாகிகள், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்கள், மாநகர இலக்கிய அணி அமைப்பாளர்கள் அவசியம் தவறாமல் கலந்துகொண்டு தங்கள் ஆலோசனையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கண்டிப்பாக அவசியம் வரவும்.

இவ்வாறு வி.பி.கலைராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தமிழ்நாட்டைப் புறக்கணித்து

# ஏழை எளியோரை வஞ்சிக்கும் நியாயமில்லாத நிதிநிலை அறிக்கை!

## மாநிலங்களவையில் – கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா உரை!

புதுடெல்லி, பிப். 14 -

**ஒன்றிய நிதிநிலை அறிக்கை 2025 மீதான விவாதத்தில் "மக்களைப் பற்றி கவலைப்படாத ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை வெறும் கானல் நீர்" என்றும் "மிகச் சிறப்பாகச் செயல்படும் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது" என்றும் மாநிலங்களவையில் கழக குழுத் தலைவர் திருச்சி சிவா உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா ஆற்றிய உரை வருமாறு : -

நிதிநிலை அறிக்கை என்பது வெறுமனே கணக்குகளின் அறிக்கை அல்ல. அது ஒரு தீர்மானம். அரசினுடைய கவனத்தில் எது முக்கிய பங்காற்றுகிறது என்பதை வெளிப்படுத்தும் அறிக்கை இது. இதுவே அரசின் செயல்பாட்டை விளக்குகிறது. நமது பிரதமர் இந்த நிதிநிலை அறிக்கையை வல்லரசு இந்தியாவுக்கு செல்வதற்கான பாதை என்று பெருமையுடன் விவரிக்கிறார். ஆனால் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் எண்கள் இந்த அறிக்கை வெறும் கானல்நீர் என்பதையே காட்டுகிறது.

திறமையாக களத்தில் உள்ள பிரச்சினைகளை மறைத்துவிட்டு இந்த நிதிநிலை அறிக்கையை வளர்ச்சியின் பிரகடனமாக ஒன்றிய அரசு அறிவிக்கிறது.

இந்த அரசு எப்போதும் வசதி படைத்தவர்களை மேலும் வசதியானவர்களாக மாற்றுவதிலேயே கவனம் செலுத்துகிறது. மாறாக ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மக்களின் வேலையின்மை, பணவீக்கம் மற்றும் குறைந்துகொண்டு பொருளாதார வாய்ப்புகள் பற்றி கிஞ்சிற்றும் கவலைப்படுவதில்லை.

**பொருளாதார வீழ்ச்சி!**

நிதிநிலை அறிக்கை 2025ஐ சமர்பித்ததற்காக நிதியமைச்சர் ஆளுங்கட்சியினரால் புகழப்படுகிறார். ஆனால் உண்மையில் நடப்பது என்ன? பொருளாதாரம் வளர்ச்சியடைவதற்கு பதில் வீழ்ச்சியடைந்து வருகிறது.

2019ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வாசிக்கும்போது தமிழின் சங்க இலக்கியம் புறநானூற்றில் இருந்து மக்களிடம் அதிகம் வரி வசூல் செய்த பாண்டிய மன்னன் அறிவுடை நம்பிக்கு பிசிராந்தையார் சொன்ன அறிவுரையை சுட்டிக்காட்டி நிதியமைச்சர் பேசினார். அதாவது விளைந்த நெல்லை அறுவடை செய்து யானைக்கு உணவாக கொடுத்தால், ஒரு சிறு நிலத்தின் நெல் போதும் ஆனால் அதுவே யானை தானே உணவைத் தேடி வயலுக்குள் வந்தால் அது உண்ணும் உணவைவிட அதன் காலால் மிதிபட்டு வீணாகும் உணவு அதிகம் என்பதுதான் அப்பாடல்.

அவ்வுண்மையை இப்போது நாங்கள் அனுபவப்பூர்வமாக உணர்கிறோம். செழித்து வளரும் மாநிலங்களின் பொருளாதார களங்களை மிதித்து மாநிலங்களின் வருமானத்தை நாசமாக்கும் யானைதான் ஒன்றிய அரசு!



விவசாயம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்றால் ஏன் ஒரு லட்சம் ட்ராக்டர்கள் டெல்லியின் எல்லையில் போராட வேண்டும்?

முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் சொன்னதுபோல, நாட்டின் 1% மக்கள் நாட்டின் 40.1% வளங்களை அனுபவிப்பதோடு அரசின் 26.6% வருமானத்தையும் பெறுகின்றனர். ஆனால் 50% ஏழை மக்கள் வெறும் 15% வருமானத்தையும் 6.4% வளங்களையும் பகிர்ந்துகொள்கின்றனர். இது முற்றிலும் முரணானது. இதற்கு நிதியமைச்சர் பதில் சொல்லியே தீரவேண்டும்.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கும் வெவ்வேறான அளவுகோளில் இந்த அரசு நிதியை பாரபட்சமாக பகிர்ந்தளிக்கிறது.

**குறைவான நிதி!**

தமிழ்நாடு அரசு நமது நாட்டின் மொத்த உற்பத்தியில் 9.04% பங்களிக்கின்றது. ஆனால் நமக்கு திரும்ப கிடைக்கும் பங்கு 4.08% மட்டுமே. 14வது நிதி ஆணைக்குழு 42% வரி பங்கீட்டை பரிந்துரைத்தது, 15வது நிதி ஆணைக்குழு அதை 41% ஆக அதை குறைத்தது, ஆனால் உண்மையில் 32% குறைவான நிதியே கிடைக்கின்றது.

மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், உத்தரபிரதேசம் 8.9% பங்களிப்பை அளிக்கின்றது, ஆனால் அது 17.94% நிதி பங்கீட்டை பெறுகிறது.

பிஹாரின் மொத்த உற்பத்தி பங்களிப்பு 2.87% ஆனால் அதற்கு 10.08% நிதி பங்கீடு அளிக்கப்படுகிறது. நாங்கள் அதிகமாக கொடுப்போம், ஆனால் அதில் பாதியளவுகூட கிடைக்கவில்லை.

ஒன்றிய அரசு கல்விக்கு மொத்த செலவில் 2.5% தான் ஒதுக்கீடு செய்கிறது, அதாவது 1,628 கோடி ரூபாய். எங்கள் மாநிலமான தமிழ்நாடு அரசு, மொத்த செலவில் 13.6% ஒதுக்கீடு செய்கிறது. தமிழ்நாடு அரசு கல்விக்கு செலவிடும் தொகை, ஒன்றிய அரசின் மொத்த கல்வி ஒதுக்கீட்டின் 40% ஆகும். நமது ஒதுக்கீடு 13.6% மற்றும் இந்த ஆண்டு அது 13.7% ஆக உயர்ந்துள்ளது. அதேபோல், சுகாதாரத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்கிறதோ 1.89%.

12 லட்சம்வரை வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அதன் பயனாளர்கள் மொத்தம் ஒரு கோடி பேர். மீதமுள்ள 139 கோடி மக்களின் நிலை என்ன?

மக்களின் அடிப்படைத் தேவைகள் கல்வி மற்றும் சுகாதாரம்தான். ஆனால் அரசு மொத்த செலவினத்தின் 1.89% மட்டும் சுகாதாரத்திற்கு ஒதுக்கீடு செய்கிறது. ஆனால் எங்கள் தமிழ்நாடு அரசு மொத்த செலவினத்தின் 5.8% சுகாதாரத்திற்கு செலவிடுகிறது.

**விவசாயிகள் தற்கொலை!**

நாளொன்றுக்கு கிட்டத்தட்ட 31 விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர். வேலையில்லா திண்டாட்டத்தினால் தற்கொலை செய்துகொள்பவர்கள் நாளொன்றுக்கு 9 பேர். மனிதக் கடத்தல்களினால் உயிரிழப்போர் நாளொன்றுக்கு ஆறு பேர். பட்டியலினத்தவர்களை வன்முறைக்கு ஆளாக்கும் வழக்குகள் 1,141, மாணவர்கள் தற்கொலைவழக்குகள் 36, சைபர் குற்றங்களில் 180 வழக்குகள் நாளொன்றுக்கு பதிவாகின்றன என ஆய்வுகள் சொல்கின்றன.

ஒருபக்கம் பெரும் கோடீஸ்வரர்கள் மேலும் கோடீஸ்வரர்களாகவும் மறுபக்கம் ஏழைகள் பரம ஏழைகளாகவும் ஆகிக் கொண்டிருக்கின்றனர். நான் தமிழ்நாட்டை பற்றி சொல்கிறேன்.

**தமிழ்நாடு மிகச்சிறப்பாகச் செயலாற்றுகின்றது!**

தேசிய அளவில் உயர் கல்விக்கு செல்லும் மாணவர்களின் சராசரி 27%, ஆனால் தமிழ்நாட்டில் உயர்கல்வி பெறுவோர் 47%. பல்கலைக்கழக மானியக் குழுவின் புது வரையறைகள் மூலம் இந்த ஒன்றிய அரசு எங்களை மேலும் வஞ்சிக்கவே முயற்சி செய்கிறது.

நீங்கள் வளர்ச்சி பற்றி பேசுகிறீர்கள். ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் பல ஆண்டுகளாக கேட்டுள்ள மெட்ரோ திட்டங்கள் மற்றும் சாலை திட்டங்கள் இங்கே குறிப்பிடப்படவில்லை. மேலும் ஒன்றிய அரசு நிர்வகிக்கும் திட்டங்களில் முன்பு 7525 என்ற விகிதத்தில் இருந்த பங்களிப்பை மாற்றி தற்போது ஒன்றிய அரசு 6040 விகிதத்தில் நிதியளிக்கிறது.

**உச்சபட்ச நிதி வசூல்!**

சிறு மற்றும் குறுதொழில் மூலம் மிக அதிகமான வேலைவாய்ப்புகள் வழங்குவதாக கூறப்படுகிறது. ஆனால், அவை மீண்டும் பெரும்பாலான கார்ப்பரேட் நிறுவனங்களாக மாறுவதற்கான முயற்சிகளும் ஒருபக்கம் நடப்பதாக குற்றம்சாட்டப்படுகிறது.

ஜி.எஸ்.டி. மூலம் சாதாரண மக்களிடம் இருந்து உச்சபட்ச நிதியை இந்த அரசு வசூலிக்கிறது. பெட்ரோலிய உற்பத்தி வரிகள் குறைக்கப்படவில்லை எனும் குற்றச்சாட்டையும் நான் இங்கே வைக்கிறேன்.

ஒவ்வொரு முறையும் நிதிநிலை அறிக்கையை ஆவலுடன் எதிர்நோக்கும் அத்தனை பேரையும் இந்த அறிக்கை ஏமாற்றியிருக்கிறது. இந்த அரசு மக்களை கைவிட்டுவிட்டது. நீங்கள் உங்களை மாற்றிக்கொள்ளவில்லை என்றால் மக்கள் உங்கள் ஆட்சிக்கு முடிவுரை எழுதுவார்கள் என்பதை நினைவூட்டுகிறேன்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

### பேரணியினால் மதநல்லிணக்கம் பாதிக்கும் – அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா வாதம்!

# பாரத் இந்து முன்னணி பேரணி தேவையற்ற பிரச்சினையை உருவாக்கும்!

## திருப்பரங்குன்றம் மலை பிரச்சினை குறித்த வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் கண்டனம்!

*சென்னை, பிப்.14-*

*"திருப்பரங்குன்றம் மலை பிரச்சினை குறித்த வழக்கில் சென்னையில் பாரத் இந்து முன்னணி பேரணி நடத்துவது தேவையில்லாத பிரச்சினையை உருவாக்கும்" என சென்னை உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.*

*பாரத் இந்து முன்னணி அமைப்பின் வடசென்னை மாவட்ட துணை தலைவர் எஸ்.யுவராஜ் என்பவர் சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், மதுரை மாவட்டத்தில் இருக்கக் கூடிய திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலை என்று இஸ்லாமியர்கள் எந்த வித அடிப்படையும் இல்லாமல் சொந்தம் கொண்டாடி, பிரச்சினை செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*திருப்பரங்குன்றம் மலை முருகப்பெருமானின் மலை அந்த மலையை காக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் சென்னை ஏகாம்பரேஸ்வரர் கோவிலில் இருந்து கந்தகோட்டம் முருகன் கோவில் வரை பிப்ரவரி 18 ம் தேதி வேல் யாத்திரை நடத்த அனுமதி கோரியிருந்ததாக தெரிவித்திருந்தார்.*

*இது தொடர்பாக, கையில் வேல் ஏந்தி பேரணி நடத்த காவல்துறை அனுமதி கோரி மனு அளித்தும் இதுவரை காவல்துறை அனுமதியளிக்கவில்லை என்பதால் பிப்ரவரி 18 ஆம் தேதி வேல் யாத்திரை நடத்த அனுமதிக்க வழங்க காவல்துறைக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை வைத்திருந்தார்.*

**அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா வாதம்!**

*இந்த வழக்கு நீதிபதி இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் ஆஜரான மாநில தலைமை அரசு குற்றவியியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா ஆஜராகி வாதிட்டது வருமாறு:*

*திருப்பரங்குன்றம் மலையின் உரிமையாளர் குறித்து பேரணி நடத்த மனுதாரர் அனுமதி கோருகிறார். ஏற்கனவே 05.02.2025 அன்று சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் இந்து முன்னணி சார்பில் போராட்டம் நடத்த அனுமதி வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மத கலவரங்களை தூண்டும் வகையில் ஊர்வலத்தினர் முழக்கங்களை எழுப்பக் கூடாது என்கிற நிபந்தனையுடன் அனுமதியளித்தது. நீதி மன்றம் உத்தரவையும் மீறி பொது அமைதிக்கும் மத நல்லிணத்திற்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் பேசியதால் முழக்கங்கள் எழுப்பியவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*மனுதாரர் கேட்கக்கூடிய வழிப்பாதை மிகவும் நெருக்கடியான போக்குவரத்து நெரிசல் நிறைந்த சாலை. ஏற்கனவே உரிமை குறித்து பிரிவிகவுன்சில் வரை சென்று முடிவு செய்யப்பட்ட பிறகு மீண்டும் அது குறித்த பிரச்சினை எழுப்புவது சரியல்ல. 1931 ஆம் ஆண்டே மதுரை சப் கோர்ட்டில் "நெல்லித்தோப்பு, சிக்கந்தர் தர்கா, கொடிமரம், மலையேறும் வழிப்பாதை இஸ்லாமியர்களுக்கு சொந்தம் என தீர்ப்பளித்துள்ளது. அந்த தீர்ப்பிற்கு மேல்முறையீடு சென்னை உயர்நீதிமன்றம் அதன் பின்னர் ப்ரிவி கவுன்சில் வரை சென்று மதுரை சப் கோர்ட்டின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இஸ்லாமியர்கள் அவர்களுடைய இடத்தில் வேண்டுதலுக்காக ஆடு கோழி பலியிட்டு படைத்து உண்ணுவது இது வரை வழக்கமாக உள்ளது என அனைத்து தரப்பினரையும் அழைத்து விசாரித்த ஆர்.டி.ஓ அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சி தலைவரும் இந்த பழக்கம் நடைமுறையில் உள்ளதை அரசுக்கு தெரிவித்துள்ளார்.*

*திருப்பரங்குன்றம் மலையை சுற்றியுள்ள மதுரை மாவட்டத்தில் உள்ள கோவில்களில் கூட பிராணிகளைப் பலியிடுவது வழக்கமாக உள்ளது.*

*உதாரணத்திற்கு*

*1) மேலூர் வட்டம், அழகர் கோவில், 18 ஆம்படி கருப்பசாமி திருக்கோவில்*

*2) மதுரை கிழக்கு வட்டம், பாண்டிமுனிஸ்வரர் கோவில்*

*3) வலையங்குளம் மலையாண்டி கருப்பசாமி திருக்கோவில்*

*4) கிராமங்களில் உள்ள எல்லைக் காவல் தெய்வங்கள்.*

*மேலும் கடந்த 18.01.2025 அன்று மதுரை முஸ்லீம் ஐக்கிய ஜமாத் என்ற பெயரில் பிராணிகளைப் பலியிட்டு தர்காவில் சமபந்தி விருந்திற்கு அழைப்பு விடுப்பது போன்று சில சமூக விரோதிகள் பொய்யான பதிவினை வெளியிட்டுள்ளார்கள். இது சம்பந்தமாக மதுரை முஸ்லீம் ஐக்கிய ஜமாத் மதுரை காவல் ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளனர். சமூகங்களிடையே நிலவும் மத நல்லிணக்கத்தை கெடுக்கும் விதத்தில் சமூக விரோதிகள் திட்டமிட்டு இச்செயல்களை செய்து வருகின்றனர்.*

*காலங்காலமாக திருப் பரங்குன்றம் மலையை சுற்றியுள்ள மக்கள் இந்து, முஸ்லீம் மற்றும் ஜெயின் ஆகியோர் மத வேறுபாடின்றி ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். மதத்தால் மற்றும் இனத்தால் என்றென்றும் தமிழ்நாடு மக்கள் ஒரே குடும்பத்தினராக தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்றனர். இந்துக்களும் முஸ்லீம்களும் சகோதர சகோதரிகளாகவே இன்று வரை வாழ்ந்து வருகின்றனர்.*

*திருப்பரங்குன்றம் மலையை ஓர் காரணமாக்கி இந்து முஸ்லீம்களிடையே தேவையற்ற கலவரங்களை உருவாக்கி மக்களின் ஒற்றுமை குலைந்து விடக் கூடாது.*

**கோவில் நகரம் மதுரை!**

*தமிழ்நாட்டில் கோவில் நகரமாக அழைக்கப்படும் மதுரை மத நல்லிணத்திற்கு பெயர் பெற்ற புனித தலமாகும். கோரிப்பாளையத்தில் அமைந்துள்ள சுல்தான் அலாவுதீன் தர்காவில் இன்று வரை இந்து மதத்தை சேர்ந்த செங்குன்ற முதலியார் சமூக மக்களால் வழங்கப்படும் கொடி தான் ஏற்றப்படுகிறது.*

*சமீபத்தில் கூட, மதுரைக்கு அருகிலுள்ள காரைக்குடியில் உள்ள ஒரு இந்து கோவில் கும்பாபிஷேகத்திற்கு முஸ்லீம் மதத்தினர் சீர்வரிசை, நன்கொடை வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இதேபோன்று, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் முஸ்லீம் சமுதாயத்தினர் விநாயக சதுர்த்தி விழாவினை கொண்டாடி ஏறக்குறைய ஆயிரம் இந்து சமுதாயத்திற்கு அன்ன தானம் வழங்கினார்கள். திருப்பூர் ஒத்தப்பாளையம் கிராமத்தில் முஸ்லீம் சமுதாயத்தினர் ஒரு விநாயகர் கோவில் அமைக்க 3 சென்ட் நிலத்தை தானமாக வழங்கியதோடு அக்கோவில் குடமுழுக்கு விழாவில் இரு சமுதாயத்தினரும் ஒன்றாக பங்குக் கொண்டு சிறப்பாக விழா நடத்தினார்கள்.*

**நாகூர் தர்கா!**

*நாகூர் தர்கா கந்தூரி விழாவில் போர்த்தப்படுகிற போர்வை பழனியாண்டி பிள்ளை பரம்பரையிலிருந்து தான் இன்று வரை வழங்கப்படுகிறது.*

*தமிழ்நாடு மத நல்லிணத்திற்கும் சமூக ஒற்றுமைக்கும் என்றும் பெயர்பெற்றது. மத வேறுபாடின்றி மக்கள் ஒரே சமுதாயமாக வாழ்ந்து வருகின்றனர். மத நல்லிணக்கத்தை காப்பதில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது என்றும் ஒவ்வொருவரின் மத நம்பிக்கையை பாதுகாப்போம் என்றும் யாருடைய மத வழிபாட்டிலும் நாங்கள் தலையிட மாட்டோம் என்றும் தடுக்க மாட்டோம் என்றும் உறுதிப்பட தெரிவித்தார். இது போன்ற போராட்டங்களால் மத நல்லிணக்கம் பாதிக்கும் என்றும் சுட்டிக் காட்டி வாதாடினார்.*

*இத்தருணத்தில் மனுவில் கோரியுள்ளவாறு 18.02.2025 அன்று ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கினால் அது தேவையற்ற விரும்பதகாத பிரச்சனைகளை உருவாக்கும் என தனது கடுமையான எதிப்பினை தெரிவித்தார்.*

**நீதிபதி கண்டனம்!**

*வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், பேரணி நடத்த கேட்டுள்ள இடம் கூட்ட நெரிசல் மிகுந்தது என்றும் திருப்பரங் குன்றம் அந்த பிரச்சனைக்கும் இதற்கும் என்ன தொடர்பு என்றும் தேவையில்லாமல் பிரச்சினையை உருவாக்கப் பார்க்கிறீர்கள் என கண்டனம் தெரிவித்தார். வேறு இடத்தை தேர்வு செய்து தெரிவிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி வழக்கினை நாளை ஒத்தி வைத்துள்ளார்.*